**BSNL அனைத்து ஊழியர் சங்கங்கள் மற்றும் அதிகாரிகள் சங்கங்களின்**
**கூட்டமைப்பு-தமிழ் மாநிலம்**

# துணை டவர் நிறுவனத்தை அனுமதியோம்-
# 15.09.2017 அன்று அனைத்து சங்க ஆர்ப்பாட்டம்

12.09.2017 அன்று கூடிய மத்திய அமைச்சரவை BSNLல் உள்ள 70,000 டவர்களை தனியாக பிரித்து புதியதாக ஒரு துணை டவர் நிறுவனம் அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது BSNL நிறுவனத்தை சீரழிக்கும் முயற்சியே தவிர வேறு ஏதுமில்லை. மத்தியில் ஆளும் அரசாங்கம் BSNL உள்ளிட்ட அனைத்து பொதுத் துறை நிறுவனங்களையும் தனியாருக்கு தாரை வார்ப்பதையே கொள்கையாக கொண்டு செயல்பட்டு வருகின்றனர். அவர்களின் நோக்கத்தினை BSNLல் உள்ள அனைத்து ஊழியர்களும் அதிகாரிகளும் தொடர்ந்து எதிர்த்து முறியடித்து வந்துள்ளோம்.

நேரடியாக BSNLஐ தனியாருக்கு தாரை வார்க்க முடியாத மத்திய அரசு கொல்லைப்புற வழியாக தனியாருக்கு தாரை வார்க்க திட்டமிட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் BSNLல் உள்ள அதன் செல்வாதாராமாக திகழும் மொபைல் டவர்களை BSNL நிறுவனத்திடம் இருந்து தனியாக பிரித்து புதியதாக ஒரு நிறுவனம் அமைப்பது என்று முடிவெடுத்துள்ளது.

எனவே நாம் இது நாள் வரை போராடி பொதுத்துறை நிறுவனமாகவே பாதுகாத்து வந்துள்ள BSNL நிறுவனத்தை தொடர்ந்து பாதுகாத்திட மத்திய அரசின் இந்த புதிய துணை டவர் நிறுவனம் என்கிற திட்டத்தை முறியடிப்பது நம் அனைவரின் கடமையாகும். எனவே BSNLல் உள்ள அனைத்து ஊழியர் சங்கங்களும் அதிகாரிகள் சங்கங்களும் இணைந்து 15.09.2017 அன்று முதல் கட்டமாக அனைத்து கிளைகளிலும் சக்திவாய்ந்த ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளன.

தமிழகத்திலும் நாம் அனைத்து சங்கங்களும் ஒன்று பட்டு அனைத்து ஊழியர்களையும் ஒன்று திரட்டி 15.09.2017 ஆர்ப்பாட்டத்தை சக்தியாக நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள,

**A.பாபு ராதாகிருஷ்ணன்** CS BSNLEU
**K.நடராஜன்** CS NFTE
**R.ராஜசேகர்** CS SNEA
**C.துரையரசன்** CS AIBSNLEA

**C.பலராம்** Dy.CS SEWA BSNL
**A.பூசப்பன்** CS(OFFG) TEPU
**G.சரவணகுமார்** CS AIGETOA

## தமிழ் மாநிலம்